2. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்ட முன்வடிவுகள். (தொடர்ச்சி).

(ஈ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

1979 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சட்ட முனவடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த)
சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு இந்திய மீன்ள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும்
தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தொடர்ந்து நடைபெறுகின்ற கண்டனத் தீர்மானத்திலே பதில் கூறுகின்ற நிகழ்ச்சியின் தொடர்பாக இன்று சில கருத்துக்களை எடுத்துக் கூற நான் விரும்புகிறேன்.

முறைப்படி என்னுடைய பேச்சு முடிந்த பிறகு பேராசிரியர் அவர்கள், தாம் சொல்ல விரும்பும் கருத்தை எடுத்துக் கூறவும், அதற்கு நான் பதில் கூற வேண்டிய அவசியம் இருந்தால் நான் எடுத்துக் கூறவும் என்கிற நிலையில் இன்றையதினம் விவாதம் தொடரும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் முதலில் விலைவாசியைப் பற்றி ஒன்றிரண்டு குறிப்புகளை இங்கே தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசியபோது விலையைக் கட்டுப்படுத்த நியாய விலைக்கடைகளை திறந்திருக்கிறார்கள் என்றாலும், புகார்கள் வருகின்றன என்பதையும் கூறி, தேவையான பொருட்கள் அங்கே இல்லை